*கவனிக்க.- 2018.05.11 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி II ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2072 - 2018 මැයි මස 18 වැනි සිකුරාදා - 2018.05.18

*2072 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 874 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2018, யூன் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, மே மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## மேல் மாகாண அரச சேவையில் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் தரம் III பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்கோரல் - 2018

மேல் மாகாண விளையாட்டமைச்சில் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்/மாவட்ட விளையாட்டு அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் பதவி உயர்த்தல் தொடர்பான நடைமுறையின் 1.1 ஆம் பிரிவின்படி விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் தரம் III பதவிக்காக தகுதியானவர்களைத் தேர்வு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழுவினால் நடாத்தப்படும். இவ்வறிவித்தலில் காட்டப்பட்டவாறு தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**02. வெற்றிடங்கள் நிலவும் துறைகள் மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை :-**

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள துறைகளில் வெற்றிடங்கள் நிலவுகின்றன. தற்போது நிலவும் வெற்றிடங்களுக்கு அல்லது எதிர்காலத்தில் ஏற்படும் வெற்றிடங்களுக்கு இணைத்துக் கொள்ளப்படும் எண்ணிக்கை தொடர்பான இறுதித் தீர்மானம் மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழுவினால் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு துறைகளிலும் நிலவும் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

| துறை | வெற்றிடங்கள் |
|---|---|
| கபடி | 01 |
| கூடைப்பந்து | 01 |
| கரப்பந்தாட்டம் | 01 |

**03. சேவை நிபந்தனைகள் :-**

(i) இந்நியமனம் நிரந்தரமானது. ஓய்வூதியக் கொடுப்பனவுடையது. உமக்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நீர் கீழ்ப்படிதல் வேண்டும். விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவு முறை/தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவு முறைக்கு பங்களித்தல் வேண்டும். அரசினால் அவ்வவ்சந்தர்ப்பங்களில் தீர்மானிக்கப்படும் முறைப்படி நீர் அதற்காக சந்தாத் தொகை செலுத்துதல் வேண்டும்.

(ii) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினதும் தாபனக் கோவைக்கும், மேல் மாகாண சபை அரச சேவையின் செயற் படிமுறை விதிப் பிரமாணங்களுக்கும், மேல் மாகாண சபையினது நிதிப் பிரமாணங்களுக்கும், மேல் மாகாண ஆளுநரினால் பிறப்பிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கும் கட்டளைகளுக்கும் மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழுவினால் காலத்திற்குக் காலம் பிறப்பிக்கப்படும் வேறு ஒழுங்கு விதிகளுக்கும், கட்டளைகளுக்கும், அமைச்சு மற்றும் திணைக்கள கட்டளைகளுக்கும் ஏற்ப செயற்படல் வேண்டும்.

(iii) பதவிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட தினத்திலிருந்து ஐந்து வருடங்களுள் அரச மொழித் தேர்ச்சியினை உறுதிப்படுத்தல் அவசியம்.

(iv) இப்பதவிக்கு இணைத்துக் கொள்ளப்படுவோர் மூன்று வருட நன்னடத்தைக் காலத்திற்குட்படுவதுடன் இச்சேவை மேல் மாகாணத்திற்கு மட்டுப்படுத்தப்படும்.

**04. சம்பள அளவுத் திட்டம் :-**

இந்நியமனத்திற்குரிய சம்பள அளவுத்திட்டம் 2016.02.25 ஆந் திகதியிட்ட அரச நிருவாக சுற்று நிருபம் 03/2016 ஆம் I ஆம் அட்டவணைக்கேற்ப மாதாந்தம் ரூபா 31,040-10X445-11X660-10X730-10X750 - ரூபா 57,550 (MN3-2016) சம்பள படிமுறை உரித்தாகும். இச்சுற்றறிக்கையின் அட்டவணை II இன் ஏற்பாடுகளுக்கமைய நியமனம் செயற்படும் தினத்திலிருந்து சம்பளம் வழங்கப்படும்.

**05. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொதுத் தகுதிகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :-**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல்;

(ii) மேல் மாகாணத்தின் எம்மாவட்டத்திலும் சேவையாற்றுவதற்குத் தகுதியான நல்ல மனோ மற்றும் உடல் ஆரோக்கிய நிலையை கொண்டிருத்தல்;

(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு முன்னர் ஆகக்குறைந்தது 03 வருடங்களாவது மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிப்பவராயிருத்தல்;

(iv) வயதெல்லை 18 வயதிற்குக் குறையாத 45 வயதிற்கு மேற்படாதவாறு இருத்தல் (தற்போது அரச/மாகாண அரச சேவையில் உள்ளவராயின் உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல);

(v) இப்பதவிக்கு இணைத்துக் கொள்வதற்கு அவசியமான இவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ள அனைத்து தகுதிகளையும் 2018.06.18 ஆந் திகதிக்கு முன்னர் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் சிறந்த நடத்தையுடையவராயிருத்தல் அவசியம்.

**06. கீழ்க் குறிப்பிட்டவாறு கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் அவசியம் :-**

(i) சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் உட்பட 03 திறமைச்சித்தியுடன் ஆங்கில மொழியில் சாதாரண சித்தியுடன் இரண்டிற்கு மேற்படாத தடவைகளில் ஆறு பாடங்களில் (06) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். அதில் 05 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்;

மற்றும்

(ii) அரச (மேல் மாகாண அரச சேவை உட்பட) அல்லது அரச கூட்டுத்தாபனத்தில் விளையாட்டு அலுவலராக அல்லது தொடர்புடைய துறையில் அவ்வாறான பதவியில் 05 வருட திருப்திகரமான சேவையினைப் பூர்த்தி செய்திருத்தல்;

மற்றும்

(iii) தேசிய அரச சபையின் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின் கீழ் தொடர்புடைய துறையின் விளையாட்டு கட்டுப்பாட்டுச் சபையினால் வழங்கப்பட்ட பயிற்சியாளரின் அனுமதிப்பத்திரததினைப் பெற்றிருத்தல்;

அல்லது

தேசிய விளையாட்டு நிறுவனம் அல்லது/இராணுவ/கடற்படை/விமானப் படை பயிற்சிப் பாடசாலையொன்றில் 06 மாதங்களிற்குக் குறையாத விளையாட்டுப் பயிற்சியாளர் டிப்ளோமா சான்றிதழினைப் பெற்றிருத்தல்

அல்லது

(iv) மேல் (i) மற்றும் (iii) இன் கீழ்க் குறிப்பிடப்பட்ட தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள சர்வதேச போட்டிகளில் இலங்கையினை பிரதிநிதித்துவப்படுத்திய வீரர் என உறுதிப்படுத்துவதற்காக அச்சர்வதேசப் போட்டியினை பிரதிநிதித்துவப்படுத்தி உரிய விளையாட்டுக் கட்டுப்பாட்டுச் சபையினால் வழங்கப்பட்ட சான்றிதழினைப் பெற்றிருத்தல்.

**07. ஆட்சேர்ப்பு செய்யும் முறை : -**

விண்ணப்பிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு துறைக்காகவும் வெவ்வேறாகத் தயாரிக்கப்பட்ட வினாத்தாள்களைக் கொண்ட எழுத்துப் பரீட்சைகளுக்குட்படுத்தப்பட்டு அதில் சித்தியடைவோர் செயன்முறைப் பரீட்சைக்குட்படுத்தப்படுவர். அப்பரீட்சைகளில் பெறப்பட்ட புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் முன்னுரிமை நிரலின் அடிப்படையில் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்டு தகுதிகள் பரீட்சிக்கப்பட்டு ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

விண்ணப்பிக்கும் துறையினடிப்படையில் பரீட்சைகளுக்குட்படுத்தப்படுவதுடன் செயன்முறைப் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் முன்னுரிமை நிரலில் உட்படுத்தப்படமாட்டார். விண்ணப்பிக்கும் துறையினைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

**08. பரீட்சை விபரம் : -**

திறந்த போட்டிப் பரீட்சையானது இரு வினாத்தாள்களைக் கொண்டது. இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தினை மாற்றுவதற்கு பின்னர் இடமளிக்கப்படமாட்டாது. ஒவ்வொரு பாடத்திலும் ஆகக்குறைந்த்து 40% புள்ளிகள் பெற்றிருத்தல் அவசியம் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைவோர் செயன்முறைப் பரீட்சைக்குட்படுத்தப்படுவர்.

| வினாத்தாள் | புள்ளிகள் | காலம் | உச்ச புள்ளிகள் | சித்தியடைவதற் கான புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1. பயிற்சி கோட்பாடுகள், வேகம், சக்தி, தாங்குதல், நெகிழ்வு, கறுசுறுப்பு போன்ற பயிற்சிப் பிரிவுகள் தொடர்பான 60 சிறு வினாக்கள் | 60 | 45 நிமிடம் | 100 | 40 |
| 2. பயிற்சிப் பிரிவுகள் தொடர்பான 02 வினாக்கள் | 40 | 01 மணித்தியாலம் | | |

**09. செயன்முறைப் பரீட்சை விபரம் :**

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைவோர் செயன்முறைப் பரீட்சைக்குட்படுத்தப்படுவர். இப்பரீட்சையில் சித்தியடைவதற்காக ஆகக்குறைந்த்து 40 புள்ளிகள் பெறவேண்டும்.

| வினாத்தாள் | புள்ளிகள் | உச்ச புள்ளிகள் | சித்தியடைவதற் கான புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. 1000 மீற்றர் - 04 நிமிடங்கள் | 20 | 100 | 40 |
| 2. 50 மீற்றர் - 10 செக்கன் | 15 | | |
| 3. ஷட்டல் ஓட்டம் - 12 செக்கன் | 20 | | |
| 4. நீளம் பாய்தல் - கூடிய தூரம் | 15 | | |
| 5. டிப்ஸ் - நிமிடத்திற்கு | 15 | | |
| 6. பயிற்சிப் பிரிவுகள் தொடர்பான 02 வினாக்கள் | 15 | | |

**10. பரீட்சைக் கட்டணம் :**

எல்லாப் பரீட்சார்த்திகளும் மேல் மாகாண சபைக்கு பரீட்சைக் கட்டணமொன்றைச் செலுத்த வேண்டும். இப்பரீட்சைக்கான கட்டணம் ரூபா 600 ஆகும். அக்கட்டணத்தினை, மேல் மாகாண சபை வருமானத் தலைப்பு 20-03-02-99 இற்கு வரவு வைத்து மேல் மாகாணத்திலமைந்துள்ள பிரதேச செயலாளர் அலுவலகமொன்றில் பணமாகச் செலுத்தி உமது பெயரில் பெறப்பட்ட பற்றுச் சீட்டினை விண்ணபத்துடன் ஒட்டவும். இக்கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது. முத்திரைகளோ காசுக் கட்டளைகளோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**11. விண்ணப்பிக்கும் முறை :**

(i) விண்ணப்பம் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு ஏற்ப A4 அளவிலான ஒரு தாளின் இரு பக்கங்ககளையும் பயன்படுத்தி தயாரித்து பரீட்சார்த்தி தமது கையெழுத்தினால் பூர்த்தி செய்தல் வேண்டும். இலக்கம் 01 தொடக்கம் 04 வரை முதல் பக்கத்திலும். இலக்கம் 05 தொடக்கம் உள்ள பகுதிகள் ஏனைய பக்கங்களிலும் அமையுமாறு விண்ணப்பம் தயாரித்தல் வேண்டும். உரிய முறைப்படி தயாரிக்கப்படாத, பூர்த்தி செய்யப்படாத உரிய திகதிக்கு கிடைக்கப்பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) விண்ணப்பப் படிவத்தினைத் தயாரிக்கும்போது தலைப்பிலுள்ள பெயரினை தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுவது அவசியமாகும்.

(iii) பூரத்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2018.06.18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு "செயலாளர் மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழு, இலக்கம் 109, பிரதான வீதி, பத்தரமுல்ல" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மேல் மாகாண விளையாட்டமைச்சில் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் தரம் III பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2018" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

(iv) இவ்வறிவித்தலில் குறிப்பிட்டவாறு தயாரிக்கப்பட்டு, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு குறித்த திகதியில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சைக்குத் தோற்ற மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழுவினால் இடமளிக்கப்படும். முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்' விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையொன்றிற்கு அழைக்கப்பட்டு விளம்பரத்திற்கு ஏற்ப உரிய தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனைவா என பரீட்சிக்கும் வேளையில் உரிய தகைமைகள் பூர்த்தி செய்யப்படவில்லை எனத் தெரியவரின் அவரது விண்ணப்பம் நிராகரிககப்படும்.

(v) விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் அதை தெரியப்படுத்தும் அறிவித்தலொன்று மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழுவின் www.psc.wp.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடப்படும். அவ்வறிவித்தல் வெளியிடப்பட்டு 02 நாட்கள் கழிந்த பின்னும் அனுமதி அட்டை கிடைக்கவில்லையாயின் அதுபற்றி மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவிற்கு தெரியப்படுத்த வேண்டும். உம்மிடமுள்ள விண்ணப்பத்தின் நிழற்பிரதி, பணம் செலுத்திய பற்றச்சீட்டின் நிழற்பிரதி, விண்ணப்பத்தினை பதிவு தபாலில் அனுப்பியதற்கான பற்றுச் சீட்டின் நிழற் பிரதி, தேசிய ஆள் அடையாள அட்டை எண் ஆகியவற்றுடன் மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழுவினைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

(vi) விண்ணப்பத்தில் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். தற்போது அரச அல்லது மாகாண அரச சேவையிலுள்ளோர் தமது திணைக்களத் தலைவர் அல்லது அவருக்குப் பதிலாக அதிகாரம் பெற்ற அலுவலரினால் அத்தாட்சிப்படுத்த முடியும். ஏனையோர் சமாதான நீதவான், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு அரச பாடசாலையொன்றின் அதிபர் (ரூபா 240,360 அல்லது அதற்கு மேலான வருடாந்த சம்பளம் பெறும் அரச அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி நிலை அலுவலர், விகாரையொன்றின் விகாராதிபதி, மதகுரு, முப்படையின் அதிகாரி, அதிகாரமுள்ள அலுவலர் ஆகிய ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.

**12. பரீட்சைக்குத் தோற்றுதல் :-**

(அ) சரியான முறையில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழுவினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். விண்ணப்பதாரர்கள் தமக்குரிய பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். தமது கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்திய அனுமதி அட்டைகளை பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் கையளித்தல் வேண்டும். அனுமதி அட்டைகளை பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் கையளிக்காத விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்குத் தோற்ற முடியாது.

(ஆ) பரீட்சை நடாத்துவது தொடர்பாக மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ள சட்டங்களுக்கு விண்ணப்பதாரிகள் உட்படல் வேண்டும். அவற்றை மீறும் பட்சத்தில் மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழுவினால் வழங்கப்டும் தண்டனைக்கு உட்படுவர்.

**13. விண்ணப்பதாரியின் ஆள் அடையாளம் :-**

தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரி திருப்தியடையும் விதத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக கீழ்வருவனவற்றிலொன்றை சமர்ப்பிக்கலாம்.

(i) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை;

(ii) குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கடவுச்சீட்டு;

**14. தவறான தகவல்களை சமர்ப்பித்தல் :-**

விண்ணப்பதாரியொருவருக்கு உரிய தகைமைகள் இல்லையென தெரியவரின் பரீட்சைக்கு முன்பு அல்லது பரீட்சையின்போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பதாரியொருவர் தெரிந்து கொண்டே தவறான தகவல்களை வழங்கியது அல்லது ஏதாவதொரு முக்கிய தகவலை மறைத்தது தெரியவரின் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்பட இடமுண்டு.

**15. பரீட்சை முறை :-**

(i) இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும்.

(ii) விண்ணப்பதாரியொருவர் தோற்றுகின்ற அனைத்துப் பாடங்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும்.

16. இப்பரீட்சையில் தகுதி பெற்ற விண்ணப்பதாரிகளின் பெயர்களை உள்ளடக்கிய பெறுபேறுகளை மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழுவினால் விண்ணப்பதாரிகளுக்கு தெரியப்படுத்தல், தபால் மூலமாகவோ அல்லது மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழுவின் www.psc.wp.gov.lk எனும் இணையத் தளதின் மூலமோ மேற்கொள்ளப்படும்.

17. இவ்விண்ணப்பங் கோரும் அறிவித்தலில் உள்ளடக்கப்பட்ட/உள்ளடக்கப்படாத விடயங்கள் தொடர்பான இறுதித் தீர்மானம் மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழுவிற்குரியதாகும்.

18. இப்பத்திரிகை அறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில அறிவித்தல்களில் வேறுபாடுகள் காணப்படுமிடத்து சிங்கள அறிவித்தல் வலிதுடையதாகும்.

ஹேமந்த சமரகோன்,
செயலாளர் (ப.க.),
மாகாண அரச சேவை ஆணைக்குழு,
மேல் மாகாணம்.

மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழு அலுவலகம்,
இல 109, பிரதான வீதி, பத்தரமுல்லை,
2018, மே 08.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**மேல் மாகாண விளையாட்டமைச்சில் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் தரம் III பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018**

☐
(அலுவலக உபயோகத்திற்கு)

* பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
ஆங்கிலம் - 4
(பொருத்தமான எண்ணைக் கூட்டில் எழுதவும்)

1.0 1.1. முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :
..........................................................................................................
( Ex : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :
..........................................................................................................
( Ex : GUNAWARDHANA, H.M.S.K)

1.3. முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ..........................................................................

1.4. தேசிய ஆள் அடையாளஅட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

2.0 2.1. நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்): ..................................................................

2.2. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) : ..........................................................................................

2.3. அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி : ...........................................................................

(i) சிங்களத்தில்/தமிழில் : ..............................................................................................................

(ii) ஆங்கில பெரிய எழுத்துக்களில் : ..................................................................................

2.4. தொலைபேசி இலக்கம் : ..............................................................................................................

3.0 3.1. தற்போதைய பதவி (இருப்பின்) : ..................................................................

3.2. (அ) அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி : ...........................................................................................

(ஆ) 2018.06.18 ஆம் ஆண்டில் சேவைக்காலம் : ..........................................................................

3.3. அப்பதவிக்குரிய துறை: ...........................................................................................

3.4. உமது பதவி அரச சேவை/மாகாண அரச சேவை/ அரச கூட்டுத்தாபனம்/வேறு நிறுவனத்திற்குரியதாயின் அதுபற்றி : ..............................................................................

3.5. உரிய நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி : .................................................................................

3.6. அலுவலக தொலைபேசி இலக்கம் : ...................................................................................

4.0 பால் (பொருத்தமான எண்ணைக் கூட்டில் எழுதவும்)

ஆண் - 0
பெண் - 1 ☐

4.1. நிரந்தர வதிவிட மாவட்டம் : கொழும்பு -1 ☐
கம்பஹா - 2
களுத்துறை - 3 (பொருத்தமான எண்ணைக் கூட்டில் எழுதவும்)

4.2 பிரதேச செயலாளர் பிரிவு : ...........................................................................................................

4.3 மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கும் காலம் : ...................................................................................

4.4 இலங்கைப் பிரசை பிறப்பினாலா ? அல்லது பதிவினாலா ? ....................................................................

4.5 சிவில் அந்தஸ்து : விவாகமானவர் -2, விவாகமாகாதவர் - 1 ☐
(பொருந்தமான எண்ணைக் கூட்டில் எழுதவும்)

4.6 பிறந்தி திகதி : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

4.7 விண்ணப்ப முடிவுத் திகதியில் வயது : வருடங்கள் : ☐☐☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

5.0 **கல்வித் தகைமைகள் :**

5.1 க.பொ.த. (சாதாரண தரப் ) பரீட்சை - முதலாம் அமர்வு :-

(i) காலம் : வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐
(ii) சுட்டெண் :
(iii) பெறுபேறு :

| தொடர் இல. | பாடம் | தரம் | தொடர் இல. | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1. | | | 6. | | |
| 2. | | | 7. | | |
| 3. | | | 8. | | |
| 4. | | | 9 | | |
| 5. | | | 10. | | |

5.2 க.பொ.த. (சாதாரண தரப் ) பரீட்சை - இரண்டாம் அமர்வு :-

(i) காலம் : வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐
(ii) சுட்டெண் :
(iii) பெறுபேறு :

| தொடர் இல. | பாடம் | தரம் | தொடர் இல. | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1. | | | 6. | | |
| 2. | | | 7. | | |
| 3. | | | 8. | | |
| 4. | | | 9 | | |
| 5. | | | 10. | | |

6.0 அறிவித்தலின் 6 ஆம் பகுதிக்கமைவாக பெற்றுக் கொண்டுள்ள தகைமை (நீர் பெற்றுள்ள தகுதிகளுக்கு பெட்டியினுள் புள்ளடி இடுக) :-

(i) அரச (மேல் மாகாண அரச சேவை உட்பட) அல்லது அரச கூட்டுத்தாபனத்தில் விளையாட்டு அலுவலராக அல்லது தொடர்புடைய துறையில் அவ்வாறான பதவியில் 05 வருட திருப்திகரமான சேவையினைப் பூர்த்தி செய்திருத்தல்; ☐

(ii) தேசிய அரச சபையின் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின் கீழ் தொடர்புடைய துறையின் விளையாட்டு கட்டுப்பாட்டுச் சபையினால் வழங்கப்பட்ட பயிற்சியாளரின் அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றிருத்தல்; ☐

(iii) தேசிய விளையாட்டு நிறுவனம் அல்லது இராணுவ /கடற்படை/விமானப் படை பயிற்சிப் பாடசாலை யொன்றில் 06 மாதங்களிக்குக் குறையாத விளையாட்டுப் பயிற்சியாளர் டிப்ளோமா சான்றிதழினைப் பெற்றிருத்தல்; ☐

(iv) க.பொ.த (சா.த.) தகுதியுடன் மேல் (ii) மற்றும் (iii) இன் கீழ்க் குறிப்பிடப்பட்ட தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள சர்வதேச போட்டிகளில் இலங்கையினை பிரதிநிதித்துவப்படுத்திய வீரர் என உறுதிப்படுத்துவதற்காக அச்சர்வதேசப் போட்டியினை பிரதிநிதித்துவப்படுத்தி உரிய விளையாட்டுக் கட்டுப்பாட்டுச் சபையினால் வழங்கப்பட்ட சான்றிதழினைப் பெற்றிருத்தல். ☐

7.0 நீர் ஏதாவதொரு நீதிமன்றத்தினால் குற்றவாளி ஆக்கப்பட்டுள்ளீரா?

(அடைப்புக் குறியினுள் புள்ளடி இடுக.) ஆம் ☐ இல்லை ☐
ஆம் எனின் விபரம் : ....................................................

8.0 பற்றுச்சீட்டின் விபரம் -
(i) பணம் செலுத்தப்பட்ட பிரதேச செயலாளர் அலுவலகம் : ..........................................................
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் : ...........................................................................
(iii) தொகை : ...................................................................

| (பற்றுச்சீட்டினை கழராதவாறு இங்கே ஒட்டவும்) |
|---|

9.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(i) இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் உறுதிப்படுத்துகிறேன். இதில் உள்ள அனைத்துப் பகுதிகளும் பூரணப்படுத்தப்பட்டுள்ளன.
(ii) இவ்வுறுதிப்படுத்தல் பொய்யானது என தெரியவரின் நான் நியமனத்திற்கு தகுதியற்றவனாவேன் என நான் அறிவேன்.
(iii) மேலும், மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழுவின் சட்டதிட்டங்களுக்குட்படுவேன், பரீட்சை நிபந்தனைகளுக்கு தகுதியற்றதாக நிரூபிக்கப்பட்டால் எனது விண்ணப்பம் செல்லுபடியற்றதாக்கப்படுவதற்கு நான் உடன்படுகிறேன்.
(iv) தகவல்கள் எதுவும் பின்பு மாற்றப்படமாட்டாது.

திகதி : ................................................ ..........................................................................
கையொப்பம்.

10.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி .......................................... என்பவரை எனக்குத் தனிப்பட்டமுறையில் தெரியும் எனவும், அவர் உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தியுள்ளார் எனவும், அதன் பற்றுச் சீட்டினை இதனுடன் இணைத்துள்ளார் எனவும், எனது முன்னிலையில் .................................................. திகதி ஒப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

.....................................................,
கையொப்பமும் முத்திரையும்

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர் : ..................................................
பதவி : ..................................................
விலாசம் : ..................................................
திகதி : ..................................................

நிறுவனத் தலைவரின் சான்றிதல் : (அரச சேவையிலுள்ள அலுவலர்களுக்கு மட்டும்)

இவ்விண்ணப்பதாரியினை திரு./திருமதி/ செல்வி .................................................................................... என்பவர் தற்போது இந்நிறுவனத்தில் .................... ஆந் திகதி முதல் ............................ ஆந் திகதி வரை .......................................................................... பதவியில் நிரந்தர/ தற்காலிக/ அமய அடிப்படையில் கடமையாற்றுகிறார். இவர் 2018.06.18 இல் சிறப்பான 5 வருடகால சேவையை பூர்த்தி செய்துள்ளார். இப்பரீட்சை முடிவுகளின்படி அவர் நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும்/முடியாது.

.....................................................,
நிறுவனத் தலைவரின் கையொப்பமும் முத்திரையும்

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர் : ..................................................
பதவி : ..................................................
விலாசம் : ..................................................
திகதி : ..................................................

05-766

## மேல் மாகாண அரச சேவையில் மொழி பெயர்ப்பாளர் தரம் II பதவிக்காக ஆட்சேர்ப்பு - 2018

மேல் மாகாண அரச சேவையில் மொழி பெயர்ப்பாளர் சேவையில் கீழ்க் குறிப்பிடப்பட்ட பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகுதியுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **பதவி** :-

- மொழி பெயர்ப்பாளர் (சிங்களம்/ தமிழ்)
- மொழி பெயர்ப்பாளர் (தமிழ் / ஆங்கிலம்)

02. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி தினம் : 2018.06.18

03. **பொதுத் தகுதிகள்** :-

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல்;

(ii) சிறந்த நடத்தை மற்றும் உடல் ஆரோக்கிய நிலையில் இருத்தல்;

(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு முன்னர் ஆக்குறைந்தது 03 வருடங்களாவது மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிப்பவராயிருத்தல்;

(iv) வயதெல்லை - 22 வயதிற்குக் குறையாத 45 வயதிற்கு மேற்படாதவாறு இருத்தல். (தற்போது அரச/மாகாண அரச சேவையில் உள்ளவராயின் உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல).

**04. சேவை நிபந்தனை** :-

இந்நியமனம் நிரந்தரமானது. ஓய்வூதியக் கொடுப்பனவுடையது. உமக்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நீர் கீழ்ப்படிதல் வேண்டும். மேலும் அங்கீகரிக்கப்பட்ட சேவை யாப்புகள் மற்றும் அரசினால் மேற்கொள்ளப்படும் சேவை நிபந்தனைகளுக்கு உட்படல் வேண்டும்.

**05. கல்வித் தகைமைகள்** :-

5.1 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றிருந்து பட்ட மொன்றினைப் பெற்றிருத்தல்;

மற்றும்

5.2 கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் தாய் மொழியில் திறமைச் சித்தியொன்றினைப் பெற்றிருத்தல்;

மற்றும்

5.3 இரண்டாம் மொழிக்காக திறமைச் சித்தியொன்றினைப் பெற்றிருத்தல்.

**சிங்கள/ தமிழ் மொழிபெயர்ப்பாளர்களுக்காக** :

கல்வித் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் தாய் மொழியில் திறமைச் சித்தியுடன் கல்வி பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை அல்லது அதற்குச் சமமான பரீட்சையொன்றில் தமிழ் மொழிக்காக திறமைச் சித்தியொன்றைப் பெற்றிருத்தல்;

அல்லது

தமிழ் மொழி தொடர்பாக ஏற்றுக் கொள்ளக்கூடிய அதைவிட உயர்ந்த தகுதியொன்றினைப் பெற்றிருத்தல்.

**தமிழ்/ ஆங்கில மொழிபெயர்ப்பாளர்களுக்காக :**

கல்வித் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் தாய் மொழியில் திறமைச் சித்தியுடன் கல்வி பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை அல்லது அதற்குச் சமமான பரீட்சையொன்றில் ஆங்கில மொழிக்காக திறமைச் சித்தியொன்றைப் பெற்றிருத்தல்;

அல்லது

ஆங்கில மொழி தொடர்பாக ஏற்றுக் கொள்ளக்கூடிய அதைவிட உயர்ந்த தகுதியொன்றினைப் பெற்றிருத்தல்.

**06. மாதாந்த சம்பள அளவுத் திட்டம் :**

இந்நியமனத்திற்குரிய சம்பள அளவுத்திட்டம் 2016.02.25 ஆந் திகதியிட்ட அரச நிருவாக சுற்று நிருபம் 03/2016 இன் I ஆம் அட்டவணைக்கேற்ப இவ் நியமனத்துக்குரிய மாதாந்தம் ரூபா 36,585-10X660-11X755-15X930 ரூபா 65,440 (MN6-2016) சம்பள படிமுறை உரித்தாகும். இச்சுற்றறிக்கையின் அட்டவணை II இன் ஏற்பாடுகளுக்கமைய நியமனம் செயற்படும் தினத்திலிருந்து சம்பளம் வழங்கப்படும்.

**07. ஆட்சேர்ப்பு செய்யும் முறை :**

விண்ணப்பதாரிகள் கீழ்க் குறிப்பிடப்பட்ட எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் புள்ளிகளின் வரிசைக் கிரமப்படி நேர்முகத் தேர்வுக்குட்படுத்தப்பட்டு வெற்றிடங்களுக்காக இணைத்துக் கொள்ளப்படுவர்.

**7.1 எழுத்துப் பரீட்சை விபரம் :**

எழுத்துப் பரீட்சையானது கீழ்வரும் பாடங்கள் தொடர்பான வினாத்தாள்களைக் கொண்டதாகும்.

| பாடம் | காலம் | உச்ச புள்ளிகள் | சித்தியடையத் தேவையான புள்ளிகள் |
|---|---|---|---|
| மொழி பெயர்ப்பு | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| ஆங்கில மொழி | 01 மணித்தியாலம் 30 நிமிடம் | 100 | 40 |
| சிங்கள மொழி | 01 மணித்தியாலம் 30 நிமிடம் | 100 | 40 |
| தமிழ் மொழி | 01 மணித்தியாலம் 30 நிமிடம் | 100 | 40 |
| கிரகித்தல் | 01 மணித்தியாலம் 30 நிமிடம் | 100 | 40 |

**பரீட்சையின் பாடத்திட்டம் :**

7.1.1 மொழி பெயர்ப்பு : அலுவலக ஆவணம் அல்லது அறிக்கை அல்லது பத்திரிகை ஆக்கமொன்றிலிருந்து எடுக்கப்பட்ட அலுவலக விஞ்ஞான, சட்ட மற்றும் தொழில்நுட்ப கட்டுரைகளிலிருந்தும் இலக்கிய நூல்களிலிருந்தும் எடுக்கப்பட்ட பகுதிகளை கீழ்க்குறிப்பிடப்பட்ட முறைகளிலொன்றில் மொழி பெயர்த்தல்

1. சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கும் தமிழ் மொழியிலிருந்து சிங்கள மொழிக்கும்
2. தமிழ் மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கும் ஆங்கில மொழியிலிருந்து தமிழ் மொழிக்கும்
(மொழி பெயர்ப்பில் சிறந்த திறமை எதிர்பார்க்கப்படும்)

7.1.2 ஆங்கில/சிங்கள/தமிழ் மொழி வினாத்தாள் - இதற்காக மூன்று மொழிகளிலும் வினாத்தாள்கள் தயாரிக்கப்படுவதுடன் அவற்றுள் சம்பந்தப்பட்ட இரு மொழிகளுக்கு பரீட்சார்த்திகள் தோற்றுதல் அவசியம்.

7.1.3 1. ஆங்கில மொழி - தரப்பட்ட கட்டுரைகளில் அடையாளப்படுத்தப்பட்ட சொற்களைப் பயன்படுத்தி அவற்றின் கருத்து விளங்கும் வகையில் வசனம் அமைத்தல். மரபுச் சொற்தொடர்களை விளக்குதல் இணைந்த மற்றும் சிக்கலான சொற் தொடர்களை விளக்குதல்.

2. சிங்கள மொழி - கட்டுரை வரைதல் சுருக்கம் எழுதல், தரப்பட்ட பந்தியொன்றை சுருக்கி தமது சொற்களில் எழுதுதல் சொற்களின் கருத்து விளங்கும் வகையில் வசனம் அமைத்தல், வசனங்களிலுள்ள பிழைகளைத் திருத்துதல் , மரபுச் சொற்தொடர்களை விளக்குதல்.

3. தமிழ் மொழி - கட்டுரை வரைதல், சுருக்கம் எழுதுதல், தரப்பட்ட பந்தியொன்றை சுருக்கி தமது சொற்களில் எழுதுதல் சொற்களின் கருத்து விளங்கும் வகையில் வசனம் அமைத்தல். வசனங்களிலுள்ள பிழைகளைத் திருத்துதல், மரபுச் சொற்தொடர்களை விளக்குதல்.

7.1. 4. கிரகித்தல் - சிங்கள/தமிழ்/ஆங்கில மொழி ஆகிய மூன்று மொழிகளிலும் வினாத்தாள் தயாரிக்கப்படுவதுடன் அவற்றுள் தான் விருப்பும் மொழியில் தோற்றுவதற்கு பரீட்சார்த்திகளுக்கு இடமளிக்கப்படும்.

இப்பரீட்சைக்காக பரீட்சார்த்திகளுக்கு பந்திகள் வழங்கப்படும். சில பந்திகள் தொடர்பாக பரீட்சார்த்திகளுக்கு கூற்றுக்கள் வழங்கப்படும். அதில் அப்பந்திகளிலுள்ள விடயங்களுடன் மிகவும் பொருந்துகின்ற கூற்றினைத் தெரிவு செய்தல் அவசியம். பந்திகளில் அடங்கியுள்ள விடயங்களை பரீட்சார்த்தி விளங்கியுள்ளாரா என பரீட்சிப்பதற்காக வினாக்கள் தயாரிக்கப்படும்.

கவனிக்க - தெளிவற்ற கையெழுத்து மற்றும் எழுத்துப் பிழைகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும். வாசிக்க முடியாத கையெழுத்துடைய விண்ணப்பதாரிகளின் தகுதி இரத்துச் செய்யப்படலாம்.

7.2 இப்பரீட்சையில் தகுதிபெற்ற விண்ணப்பதாரிகளின் பெயர்களை உள்ளடக்கிய பெறுபேறுகளை மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் விண்ணப்பதாரிகளுக்கு தெரியப்படுத்தல் தபால் மூலமாகவோ மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் www.psc.wp.gov.lk எனும் இணையத்தளத்தின் மூலமாகவோ அறியத்தரப்படும்.

**8. விண்ணப்பிக்கும் முறை :-**

8.1 இப்பரீட்சைக்கான கட்டணம் ரூபா 600.00 ஆகும். அக்கட்டணத்தினை மேல் மாகாண சபை வருமானத் தலைப்பு 20-03-02-99 இற்கு வரவு வைத்து மேல் மாகாணத்திலமைந்துள்ள ஏதாவதொரு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பணமாகச் செலுத்தி உமது பெயரில் பெறப்பட்ட பற்றுச் சீட்டினை விண்ணப்பத்துடன் ஒட்டவும்.

8.2 இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப தயாரித்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2018.06.18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு செயலாளர், 'மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழு', இலக்கம் 109, பிரதான வீதி, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமை குறித்து அறியத்தரப்படமாட்டாது. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் " மேல் மாகாண அரச சேவையில் மொழி பெயர்ப்பாளர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2018" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். உரிய திகதிக்கு கிடைக்கப்பெறாத உரிய தகுதிகளைப் பூர்த்தி செய்யாத பூரணமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8.3 இவ்விண்ணப்பங்கோரும் அறிவித்தலில் உள்ளடக்கப்பட்ட/உள்ளடக்கப்படாத விடயங்கள் தொடர்பான இறுதித் தீர்மானம் மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழுவிற்குரியதாகும்.

9. இவ் அறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில அறிவித்தல்களில் வேறுபாடுகள் காணப்படுமிடத்து சிங்கள அறிவித்தல் வலிதுடையதாகும்.

10. இவ் அறிவித்தல் மற்றும் மாதிரி விண்ணப்பம் மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் www.psc.wp.gov.lk எனும் இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

எம். ஜீ. ஏ. திலகரத்தன,
செயலாளர்,
மாகாண அரச சேவை ஆணைக்குழு,
மேல் மாகாணம்.

மாகாண அரச சேவை ஆணைக்குழு அலுவலகம்,
மேல் மாகாணம்,
2018, ஏப்பிறல் 25.

மாதிரி விண்ணப்பம்

**மேல் மாகாண அரச சேவையில் மொழி பெயர்ப்பாளர் தரம் II பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018**

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு)

* அறிவித்தலின் இலக்கம் 1 இற்கேற்ப விண்ணப்பிக்கும் பதவி உரிய கூட்டினுள் புள்ளடி (✓) இடுக.

| | |
|---|---|
| மொழி பெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்) | |
| மொழி மெயர்ப்பாளர் (தமிழ்/ஆங்கிலம்) | |

* மொழி மூலம் :

கிரகித்தல் பரீட்சைக்காக தோற்றும் மொழி மூலம் உரிய கூட்டினுள் புள்ளடி (✓) இடுக.

| | |
|---|---|
| சிங்களம் | |
| தமிழ் | |
| ஆங்கிலம் | |

விண்ணப்பிக்கும் பதவிக்குரிய இரண்டு மொழிகள் உரிய கூட்டினுள் புள்ளடி (✓) இடுக.

| | |
|---|---|
| சிங்களம் | |
| தமிழ் | |
| ஆங்கிலம் | |

1.0 1.1. முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :
..........................................................................................................................
( Ex : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2. முதலெழுத்துக்களுடன் பெயர் (முதலெழுத்துக்கள் பின்னால் வருமாறு) (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :
..........................................................................................................................
( Ex : GUNAWARDHANA, H.M.S.K)

1.3. முழுப் பெயர் ( சிங்களத்தில்/தமிழில்) : ..........................................................................

1.4. தேசிய ஆள் அடையாளஅட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

2.0 2.1. நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்): ..........................................................

2.2. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) : ..........................................................................

2.3. அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி : ..........................................................................

(i) சிங்களத்தில்/தமிழில் : ..........................................................................................

(ii) ஆங்கில பெரிய எழுத்துக்களில் : ..........................................................................

2.4. தொலைபேசி இலக்கம் தனிப்பட்ட : ...................................... அலுவலக ..........................................

3.0 3.1. தற்போதைய பதவி (இருப்பின்) : ..........................................................................

3.2. அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி : .......................... 2018.06.18 இல் சேவைக்காலம் : ..........................

3.3. அப்பதவிக்குரிய துறை : ..........................................................................

3.4 உமது பதவி அரச சேவை/மாகாண அரச சேவை/ அரச கூட்டுத்தாபனம்/வேறு நிறுவனத்திற்குரியதாயின், அதுபற்றி : ......................................................................

3.5 உரிய நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி : ..........................................................................

3.6. அலுவலக தொலைபேசி இலக்கம் : ......................................................................

4.0 பால் (பொருத்தமான எண்ணைக் கூட்டில் எழுதவும்)

ஆண் - 0
பெண் - 1 ☐

4.1. நிரந்தர வதிவிட மாவட்டம் : கொழும்பு - 1
கம்பஹா - 2
களுத்துறை - 3 ☐

(பொருத்தமான எண்ணைக் கூட்டில் எழுதவும்)

4.2 பிரதேச செயலாளர் அலுவலகம் : ..........................................................................

4.3 மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கும் காலம் :

வருடங்கள் : ☐☐☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

4.4 இலங்கைப் பிரசை பிறப்பினாலா அல்லது பதிவினாலா ? ..........................................................................

4.5 சிவில் அந்தஸ்து விவாகமானவர் -2, விவாகமாகாதவர் - 1 ☐
(பொருந்தமான எண்ணைக் கூட்டில் எழுதவும்)

4.6 பிறந்தி திகதி :
ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ நாட்கள் : ☐☐

4.7 விண்ணப்ப முடிவுத் திகதியில் வயது :
வருடங்கள் : ☐☐☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

5.0 கல்வித் தகைமைகள் :
(விளம்பரத்தின் 05 ஆம் இலக்கத்திற்கமைவாக விண்ணப்பித்த பதவிக்குரிய தகைமைகளைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் நிழற் பிரதிகளை இணைக்கவும்)

5.1 பட்டம் தொடர்பான தகவல்கள் :
பட்டம் : ..........................................................................

பல்கலைக்கழகம் : ..........................................................................

செல்லுபடியாகும் திகதி : ..........................................................................

5.2 விளம்பரத்திற்கேற்ப க.பொ.த. (சாதாரண தரப் ) பரீட்சை : வருடம் .................. சுட்டெண் .....................
விண்ணப்பிக்கும் பதவிக்கேற்ப

| பாடம் | தரம் |
|---|---|
| தாய் மொழி | |
| இரண்டாம் மொழி | |

5.3 க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் விண்ணப்பிக்கும் பதவிக்குரிய இரண்டாம் மொழிக்காக திறமைச் சித்தி இல்லாதிருப்பின் அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்வான தகைமை பற்றிய விபரம் :

5.3.1 இரண்டாம் மொழி - (பொருத்தமான கூட்டில் புள்ளடி ( X ) இடுக)

| | |
|---|---|
| சிங்களம் | |
| தமிழ் | |
| ஆங்கிலம் | |

5.3.2 பாடநெறி அல்லது உயர் தகைமை (பெயரைக் குறிப்பிடவும்) : ..................................................

5.3.3 சான்றிதழ் வழங்கிய நிறுவனம் : ..................................................

5.3.4 சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி : ..................................................

6.0 பற்றுச்சீட்டின் விபரம் -

(i) பணம் செலுத்தப்பட்ட பிரதேச செயலாளர் அலுவலகம் : ..................................................
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் : ..................................................
(iii) தொகை : ..................................................

(பற்றுச்சீட்டினை இங்கே கழராதவாறு ஒட்டவும்.)

7.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(i) இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் உறுதிப்படுத்துகிறேன். இதில் உள்ள அனைத்துப் பகுதிகளும் பூரணப்படுத்தப்பட்டுள்ளன.
(ii) இவ்வுறுதிப்படுத்தல் பொய்யானது எனத் தெரியவரின் நான் நியமனத்திற்கு தகுதியற்றவனாவேன் என நான் அறிவேன்.
(iii) மேலும் மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழுவின் சட்டதிட்டங்களுக்குட்படுவேன், பரீட்சை நிபந்தனைகளுக்கு தகுதியற்றதாக நிரூபிக்கப்பட்டால் எனது விண்ணப்பம் செல்லுபடியற்றதாக்கப்படுவதற்கு நான் உடன்படுகிறேன்.
(iv) தகவல்கள் எதுவும் பின்பு மாற்றப்படமாட்டாது.

..................................................

திகதி : .................................................. விண்ணப்பதாரியின் கையொப்பம்

8.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி .......................................... என்பவரை எனக்குத் தனிப்பட்டமுறையில் தெரியும் எனவும், அவர் உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தியுள்ளார் எனவும், அதன் பற்றுச் சீட்டினை இதனுடன் இணைத்துள்ளார் எனவும், எனது முன்னிலையில் .................................................. ஆந் திகதி ஒப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

..................................................,
ஒப்பமும் முத்திரையும்

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப் பெயர் : ..................................................

பதவி .: ..................................................

விலாசம் : ..................................................

திகதி: ..................................................

**நிறுவனத் தலைவரின் சான்றிதழ் (அரச சேவையிலுள்ள அலுவலர்களுக்கு மட்டும்)**

இவ்விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ........................................................................................ என்பவர் தற்போது இந்நிறுவனத்தில் .................... ஆந் திகதி முதல் ............................. ஆந் தேதி வரை நிரந்தர/தற்காலிக/அமய அடிப்படையில் கடமையாற்றுகிறார். இவர் 2018.06.18 இல் சிறப்பான 5 வருடகால சேவையை பூர்த்தி செய்துள்ளார். இப்பரீட்சை முடிவுகளின்படி அவர் நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும்/முடியாது.

......................................................,
திணைக்களத் தலைவரின்
ஒப்பமும் முத்திரையும்.

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர் : ...................................................
பதவி : ...................................................
விலாசம் : .......................................................................
திகதி : ...................................................

5-767